## 12.6 2000–2001ஆம் ஆண்டில் திட்ட செயல்பாட்டிற்கான வழிகாட்டி நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (எஸ்.ஜி.எஸ்.ஒய்.) துறை

அரசாணை (நிலை ) எண். 136 நாள் : 24.05.2000

படிக்க:

1. ஊரக வளர்ச்சி (ஒஊவதி–1) துறை அரசாணை (நிலை) எண். 89. நாள் : 19.05.1999
2. ஊரக வளர்ச்சி இயக்குநர் நே.மு.கடித எண். 32091/2000 திட்டம்–4, நாள் : 07.4..2000

**ஆணை**

1999–2000ம் ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் செயலாக்கத்திற்காக விரிவான வழிகட்டி நெறிமுறைகள் பார்வை 1ல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்டுள்ளது.

2. 2000–2001ம் ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் செயலாகத்திற்காக பார்வை 2ல் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் ஊரக வளர்ச்சி இயக்குநர் அனுப்பிய கருத்துருவை அரசு கவனமாக ஆராய்ந்தது. கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்படுகிறது.

3. பார்வை 1ல் குறிப்பிட்டிருக்கும் அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகள் 2000–2001ம் ஆண்டிற்கும் கீழ்க்குறிப்பிட்டுள்ள மாறுதல்களுக்கு உட்பட்டு பின்பற்ற வேண்டுமென்று அரசு ஆணையிடுகிறது.

**(1) இரு தவணைகளில் நிதியை விடுவித்தல்**

2000–2001 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக நிதி ரூபாய் 75 கோடி (ரூபாய் எழுபத்தி ஐந்து கோடி) ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி இரண்டு தவணைகளில் ஒரு தவணைக்கு 50 சதவீதம் வீதம் விடுவிக்கப்படும். இத்திட்டத்திற்கான நிதியை ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு விடுவிப்பதற்கு அரசு அதிகாரம் அளிக்கிறது. முதல் தவணை நிதியான 50 சதவீதத்தை ரூ.37.50 கோடி (ரூபாய் முப்பத்தி ஏழு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) ஊரக வளர்ச்சி இயக்குநர் மாவட்டங்களுக்கு பிரித்து விடுவிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இவ்வாறு விடுவிக்கும் தொகை அரசாணை (நிலை) எண். 737 நிதி (வழிவகை) துறை நாள்–28.12.98ல் குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்புகளில் வரவு வைக்கப்பட்டு பிறகு தேவைக்கேற்ப விடுவிக்கப்பட வேண்டிய மீதமுள்ள 50 சதவீத இறுதித் தொகையை ரூ.37.50 கோடி (ரூபாய் முப்பத்தி ஏழு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) தற்போது விடுவிக்கப்படும். 50 சதவீத தொகையில் 60 சதவீத தொகை செலவான சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு அதற்கான கணக்கு பட்டியல் பெற்று நிதித் துறையின் இசைவினைப் பெற்றே ஊரக வளர்ச்சி இயக்குநர் விடுவிக்க வேண்டுமென்று அரசு ஆணையிடுகிறது.

**(2) நிதி ஒதுக்கீடு முறை**

2000–2001ம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்தும் பொழுது மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அந்தந்த மாவட்டங்களில் உள்ள அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ள ஊராட்சிகளின் அடிப்படையில் ஊரக வளர்ச்சி துறை இயக்குநரும், மாவட்ட அளவில் ஊராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும்போது 75 சதவீதம் மக்கள் தொகை அடிப்படையிலும் மீதி 25 சதவீகிதத்தை, தேவைக்கேற்ப அடிப்படை வசதிகளில் உள்ள இடைவெறியை நிறைவு செய்யும் வகையில் ஊராட்சிகளுக்கு நிர்ணயித்து மாவட்ட ஆட்சியரும் விடுவிக்க அரசு ஆணையிடுகிறது.

**(3) நிதியைப் பயன்படுத்தும் முறை**

இத்திட்டத்திற்கான நிதி அடிப்படை வசதிகளாக குடிநீர் வசதி, சாலைகள், கான்கீரிட் தெருக்கள், தெரு விளக்குகள், துப்புரவு, சமுதாய கழிப்பிடங்கள், தனிநபர் கழிப்பிடங்கள், பள்ளிக் கட்டிடங்கள், மதிய உணவு கூடங்கள், பொது விநியோக கடைகள் போன்றவற்றிற்கு முன்னுரிமை அளித்து செலவிடப்படவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், ஆணையர், சென்னை மாநகராட்சிக்கும் ஆணையிடப்படுகின்றது.

**(4) திட்டங்களை இணைத்து ஒருமுகப்படுத்தி செயலாக்குதல்**

இத்திட்டத்துடன் ஊரக வளர்ச்சித் திட்டங்களை இணைத்து செயல்படுத்துபோது பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அண்ணா மறுமலர்ச்சி திட்டக் கிராமத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் தகுதி வாய்ந்த உறுப்பினர்களைக் கொண்டு அதிக அளவில் சுயஉதவிக் குழுக்களை அமைப்பதற்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்த வேண்டுமென்று ஆணையிடப்படுகிறது. மேலும் பிற துறைகள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை செயல்படுத்தும்

திட்டங்களையும் ஒருமுகப்படுத்தி தேவைப்படும் அனைத்து அடிப்படை வசதிகளும் நிறைவு செய்யப்பட வேண்டும்.

**(5) தடை செய்யப்படும் பணிகள்**

பேருந்து நிழற்கூடை, கலையரங்கம், சமுதாய கூடம் கான்கீரிட்டினால் ஆன சாக்கடைகள் கட்டுதல் ஆகியவற்றிற்கு இத்திட்டத்தின் நிதி செலவிடுவதற்கு தடை செய்யப்படுகிறது.

4. முன்பத்தி 3(1) ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினமாக ரூ.37.50 கோடி (ரூபாய் முப்பத்தி ஏழு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> “2515 00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள்– 800 ஏனைய செலவினம் ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் JX அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தை செயல்படுத்துதல் – 09 உதவி மானியம் 02. மூலதனச் செலவுக்கான மானியங்கள் (த.தொ.கு. 2515 00 800 JX 0923)“

5. இந்த ஆணை நிதித் துறையின் அ.சா.எண்.319/SS(GV)/2000–1, நாள்–24.05.2000ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

## இணைப்பு

அரசாணை (நிலை) எண். 136, ஊரக வளர்ச்சித் துறை நாள்–24.05.2000 2000–2001ஆம் ஆண்டிற்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக அறிவிக்கப்பட்டுள்ள ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடுகள் (ரூபாய இலட்சத்தில்)

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராமங்களின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 8 | 285.714 |
| 2 | திருவள்ளூர் | 8 | 285.714 |
| 3 | கடலூார் | 9 | 321.429 |
| 4 | விழுப்புரம் | 12 | 428.572 |
| 5 | வேலூார் | 12 | 428.572 |
| 6 | திருவண்ணாமலை | 9 | 321.429 |
| 7 | சேலம் | 9 | 321.429 |
| 8 | நாமக்கல் | 6 | 214.286 |
| 9 | தருமபுரி | 10 | 357.143 |
| 10 | ஈரோடு | 11 | 392.857 |
| 11 | கோயம்புத்தூர் | 12 | 428.571 |
| 12 | நீலகிரி | 3 | 107.143 |
| 13 | தஞ்சாவூர் | 9 | 321.429 |
| 14 | நாகப்பட்டினம் | 6 | 214.286 |
| 15 | திருவாரூர் | 5 | 178.571 |
| 16 | திருச்சிராப்பள்ளி | 7 | 250.000 |
| 17 | கரூர் | 4 | 142.857 |
| 18 | பெரம்பலூார் | 5 | 178.571 |
| 19 | புதுக்கோட்டை | 5 | 178.571 |
| 20 | மதுரை | 7 | 250.000 |
| 21 | தேனி | 5 | 178.571 |
| 22 | திண்டுக்கல் | 7 | 250.000 |
| 23 | இராமநாதபுரம் | 5 | 178.571 |
| 24 | விருதுநகர் | 6 | 214.286 |
| 25 | சிவகங்கை | 5 | 178.571 |
| 26 | திருநெல்வேலி | 11 | 392.857 |
| 27 | தூத்துக்குடி | 7 | 250.000 |
| 28 | கன்னியாகுமரி | 7 | 250.000 |
| | மெத்தம் | 210 | 7500.00 |

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்